## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**OS.No.32/2022**

DW1–ஜெயலட்சுமி நாள்.27.04.2026

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னுடைய சொந்த ஊர் பெரம்பலூர் ஆகும். எனக்கு எழுத, படிக்க தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் ஞாபகமில்லை. பரப்பளவு 2.47 ஆகும். தாவா சொத்தை கிரயம் கொடுப்பது சம்மந்தமாக ரெங்கராஜ், அவரது தாயார் சுப்பம்மாள், பிரமானந்தம் ஆகியோர்கள் வந்தார்கள். அவர்களை ஏற்கனவே எனக்கு பழக்கம் கிடையாது. தாவா சொத்து அருகில் எனக்கு வேறு சொத்துக்கள் கிடையாது. அவர்கள் எப்படி என்னிடம் கிரயம் கொடுக்க வந்தார்கள் என்றால் முத்துசாமி அய்யா என்பவர் அவர்களை அழைத்துவந்தார். அவர் எளம்பலூரை சேர்ந்தவர். அவர் தற்போது உயிரோடு இருக்கிறார். தாவா சொத்து உரிமை சம்மந்தப்பட்ட ஆவணங்களை அப்போது வரும்போது என்னிடம் காண்பித்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவாசொத்து மேற்படி 3பேர்களுக்கு பாத்தியப்பட்டது என்று எப்படி என்று நான் ஊர்ஜிதம் செய்துகொண்டேன் என்றால் அவர்கள் ரிஜிஸ்ட்ர் செய்துள்ளார்கள். தாவாசொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட அசல் ஆவணங்களை என்னிடம் காண்பித்தார்களா என்றால் அசல் தொலைந்துவிட்டது என்று சொல்லி நகலை காண்பித்தார்கள். அந்த நகலை படித்துபார்த்தேன். 2ம் பிரதிவாதிக்கு எப்படி எவ்வளவு உரிமை உள்ளது என்று ஆவணங்களை காண்பித்தார்களா என்றால் அவர்கள் எழுதி வைத்திருந்ததை காண்பித்தார்கள். 2ம் பிரதிவாதி சம்மந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சரத்துக்களையும், வந்திருந்த நபர்களின் உரிமையோடு ஒப்பிட்டு படித்து பார்த்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை கொடுக்கும்போது 1ம் பிரதிவாதி உயிரோடு இருந்தார். தற்போதும் இருக்கிறார். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் லேட். ரெங்கராஜ் ரெட்டியார் மனைவி விதவை லதா ஆகிய நான் எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் என்று கூறப்பட்டுள்ளது

என்றால் சரிதான். ரெங்கராஜ் உயிரோடு இருக்கும்போது ஏன் லேட் என்று ஆவணத்தில் குறிப்பிடபட்டுள்ளது என்று நான் கேட்கவில்லை. எனக்கு தாவாசொத்தை எழுதிகொடுக்கும்போது 1, 2 பிரதிவாதிகள் எளம்பலூரில் தான் குடியிருந்தார்கள். இதுசம்மந்தமாகவும், தரப்பினர்கள் சம்மந்தாகவும் எளம்பலூரில் உள்ள அக்கம், பக்கம்நிலத்துக்காரர்கள் மற்றும் ஊர்காரர்களை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. இதுசம்மந்தமாக வில்லங்க சான்று எடுத்து பார்த்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது போன்று வில்லங்கம் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்து எளம்பலூர் கிராமத்தில் அமைந்துள்ளது.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.